# மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம்
# ஆத்தூர்

------

## அசல் வழக்கு எண்.15/2024

**2026 ஆம்** வருடம் ஆகஸ்ட் மாதம் 31 ஆம் நாள் வாதி தரப்பு சாட்சியான வா.சா.2–இன் வாக்குமூலம் 1873ம் வருடத்திய 10வது விதியின் படி ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | மகாலிங்கம் | ஜாதி | : | |
| த.பெ | : | ராமசாமி | தொழில் | : | வயது முதிர்வின் காரணமாமக வேலைக்கு செல்லவில்லை |
| கிராமம் | : | திருமையகவுண்டன்பட்டி, பச்சமலையான்கோட்டை | சமயம் | : | |
| தாலுகா | : | நிலக்கோட்டை | வயது | : | 76/2026 |
| தேதி | : | 31.08.2026 | | | |

**1, 3 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

நீதிமன்றத்தில் இருந்து உங்களுக்கு சாட்சி சொல்ல அழைப்பாணை வரவில்லை என்றால் சரிதான். உங்களை சாட்சி சொல்ல வாதி தான் அழைத்து வந்தார் என்றால் சரிதான். தாவா சொத்து வாதிக்கு எவ்வாறு பாத்தியப்பட்டது என்றால் வாதி கரசாமியிடம் 30 சென்ட் கிரையம் வாங்கியுள்ளார் அதன் படி அவருக்கு தாவா சொத்து பாத்தியம். வாதியின் அம்மா பாப்பம்மாள் 81 சென்ட் வாதிக்கு கொடுத்துள்ளார். வாதி அவர் அம்மாவிடம் வாங்கிய 81 சென்ட் எத்தனை சர்வே எண்களில் இருந்து வாங்கப்பட்டது என்றால் எனக்கு தெரியாது. நீங்கள் சொல்லும் 81 சென்ட் நிலங்கள் 3 சர்வே எண்களை உள்ளடக்கியது என்றால் தெரியாது. தாவா சர்வே எண் உங்களுக்கு தெரியுமா என்றால் தெரியாது. தாவா சொத்தின் விஸ்தீரணம் 1 ஏக்கர் 41 சென்ட் ஆகும். பிரதிவாதியின் சர்வே எண் என்ன என்றால் தெரியாது. பிரதிவாதி நிலம் எந்த பக்கம் உள்ளது என்றால் வடக்கு பக்கம் உள்ளது. பிரதிவாதியின் நிலத்திற்கு வடக்கு பக்கம் ஒரு குளம் உள்ளது என்றால் சரிதான். குளத்தில் தண்ணீர் வந்தால் பிரதிவாதியின் இடத்திற்குள் குளத்து நீர் வரும் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. வாதி நிலம் மேடாகவும், பிரதிவாதியின் நிலம் பள்ளத்தில் உள்ளது என்றால் சரிதான். பிரதிவாதியின் 1 ஏக்கர் 40 சென்டில் வடக்கு பக்கம் உள்ள குளத்தின் நீரினால் விவசாயம் நிலத்தில் அழிமானம் ஏற்பட்டு வந்ததால் முன் பாகஸ்தர்கள் பிரதிவாதிகளுக்கு கூடுதலாக 30 சென்ட் கொடுக்கப்பட்ட விவரம் தெரியுமா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அதன் அடிப்படையில் தாவா சொத்திற்கு பிரதிவாதிகள் பெயரில் பட்டா உள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. வாதியின் தாயாருக்கு 3 பிள்ளைகள், ராமு , பாண்டி, திருமல் ஆகிய மூன்று பேர்கள் திருமல் தற்போது ஊரில் இல்லை. மேற்படி 3 நபர்கள் விவரத்தை நீங்கள்

நிருபண வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் அது பற்றி எனக்கு ஞாபகம் இல்லை. வாதியின் தாயார் பாப்பம்மாள் பிள்ளைகள் மூன்று நபர்களுக்கும் சரிசமமாக பாகம் உள்ளது என்றால் சரிதான். ஒரு நபர் திருமல் என்பவர் இல்லை. பாப்பம்மாள் இறந்தபிறகு அவர் கிரையம் பெற்ற சொத்தை ராமு, பாண்டி வாய்கரலாக பிரித்து அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரிதான். பாண்டியை இவ்வழக்கில் ஒரு தரப்பினராக சேர்க்கவில்லை என்ற விவரம் உங்களுக்கு தெரியுமா என்றால் தெரியும். பாப்பம்மாள் வாங்கிய சொத்தில் பாண்டிக்கும் பாகம் உள்ளது என்றால் சரிதான். பிரதிவாதிகளுக்கு பிரதிவாதிகளின் சொத்து எவ்வாறு பாத்தியம் என்றால் சக்கரவர்த்தி (எ) சர்க்கரை என்பவரிடம் பிரதிவாதி ஜெயராம் 140 சென்டை கிரையம் பெற்றுள்ளார். அதன் பிறகு 2ம் பிரதிவாதி சுப்பிரமணி பெயருக்கு கிரையம் பெற்றுள்ளார் என்றால் சரிதான். 2ம் பிரதிவாதி கிரையம் பெறுவதற்கு முன்பாகவே 3ம் பிரதிவாதி செல்வராஜ் பெயருக்கு தாவா சொத்துக்களும் மற்ற சொத்துக்களுக்கும் பட்டா ஏற்பட்டுவிட்டது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. பிரதிவாதிகள் அனைவரும் சகோதரர்கள் என்றால் சரிதான். 1,2 பிரதிவாதிகள் ஜெயராம், சுப்பிரமணி அரசாங்க வேலை பார்க்கிறார்கள் என்றால் ஜெயராம் அரசு வேலை பார்க்கிறார், சுப்பிரமணி பற்றி தெரியாது. 1,2 பிரதிவாதிகள் ஊரில் இல்லாததால் 3ம் பிரதிவாதி செல்வராஜ் தான் விவசாயம் செய்கிறார் என்றால் சரியல்ல, ராமுவும் பாண்டியும் தான் விவசாயம் செய்கிறார்கள். தாவா சொத்திற்கு அருகில் உங்கள் நிலம் உள்ளது என்றால் இல்லை. எப்போது அவர்களுக்குள் சண்டை ஏற்பட்டது என்றால் இரண்டு வருடம் இருக்கும் நான் அங்கு சென்றிருந்தேன். எந்த தேதியில் நீங்கள் சென்றிருந்தீர்கள் என்று தேதி, மாதம் தெரியாது என்றால் சரிதான். தாவா சொத்திற்கு நான்கு மால் என்ன என்றால் வடக்கில் கண்மாய், தெற்கில் கரசாமி வகையறாவுக்கு சொந்தமான நிலமும், மேற்கில் ராமுவின் நிலமும், கிழக்கில் கண்மாயின் ஒரு பகுதியும் உள்ளது. தாவா சொத்து 3ம் பிரதிவாதியின் அனுபவத்தில் தான் உள்ளது என்றும், வாதியின் அனுபவத்தில் இல்லை என்றால் சரியல்ல. தாவா சொத்திற்கு யார் பெயரில் பட்டா உள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. வாதிக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கு தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

Typed to my direction in
open court ready over by
me and acknowledged
by him/her to be correct.

DM-Cum-JM,
Athoor